ஆகியவர்களுடைய பெயர்களை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக பெறக் கூடாது என ஒரு தடை இருந்தது. அதன் காரணமாகத்தான், தட்டச்சர்கள், சுருக்கெழுத்தாளர், எழுத்தர் இவர்களெல்லாம் ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவில் வேலைவாய்ப்பே இல்லாமல் இருந்தார்கள். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மன்றத்திலே மன்ற உறுப்பினர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் எடுத்துக் தெரிவித்ததின் அடிப்படையில் இந்த மன்றத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, எழுததராக தகுதி உள்ளவர்களும் 3 மாத காலத்திற்கு வேலைவாய்ப்பு இருக்குமேயானால் கூட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலேயிருந்து அவர்களுடைய பெயர்களைப் பெற்று வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கலாம் என்கின்ற புதிய ஆணையினை இந்த அரசு இப்போது வெளியிட்டிருக்கிறது. எனவே அப்படிப்பட்டவர்களுக்கு வேலை எளிதிலே கிடைக்கக்கூடிய அல்லது குறிப்பிட்ட காலக் கெடுவிலே கிடைக்கக்கூடிய சூழ்நிலை இப்போது உருவாகி இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்களுடைய அச்சம் அகற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெமினி கேப்சூல் தொழிற்சாலை

198—(வினா எண். 850) -திரு. யு. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

கோவை குறிச்சியில் மூடப்பட்டுள்ள ஜெமனிகேப்சூல் தொழிற்சாலையைத் திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ,ஜெமினி கேப்சூல் என்கின்ற தொழிற்சாலை 1978-ஆம் ஆண்டு மருந்து உற்பத்திக்காகத் தொடங்கப்பட்டது. பின்னாலே 1988 ஆம் ஆண்டு பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக தொழிலாளர்களுடைய

வேலை நிறுத்தம், நிதிப் பற்றாக்குறை ஆகியவற்றால் மூடப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றிய 52 தொழிலாளர்களில் நேரடியாக 40 பேர் தங்களின் கணக்கு களை நேர் செய்து கொண்டார்கள். எனவே இத்தகைய இக் கட்டான சூழ்நிலையில் இந்த அரசு தலையிடுவதற்கான சூழல் இல்லை என்பதைத் தெரிவிப்பதோடு ஒரு விவர அறிக்கையும் அவையின் முன்னே வைக்கப்பட்டிருக்கிறது.

விவர அறிக்கை.

கோவை சுந்தராபுரத்திலுள்ள ஜெமினி கேப்சூல்ஸ் என்ற நிறுவனம் 1978 ஆம் ஆண்டில் மருந்து மாத்திரை தயார் செய்ய ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனத்தில் 52 தொழி லாளர்கள் பணி புரிந்து வந்தனர். தொழிலாளர்களின் ஒத்துழையாமை மற்றும் நிறுவனத்தின் நிதி நெருக்கடி காரணமாக நிறுவனத்தை 1—5—1988 முதல் நிரந்தரமாக மூடுவது என நிர்வாகம் முடிவெடுத்து, தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய நஷ்ட ஈடு பணிக் கொடை 1987–88 ஆம் ஆண்டு ஒய்வு லீவு ஊதியம், 1987–88 ஆம் வருட போனஸ் ஆகியவை 1—5—1988-ல் பட்டுவாடா செய்யப்படும் என அறிவித்தனர்.

(2) இந்நிறுவனத்தில் பணி புரியும் தொழிலாளர்கள் சார் பாக செயல்படும் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கம் இது குறித்து 7—4—1988 ஆம் தேதியன்று கோவை தொழிலாளர் நல அலுவலரிடம் மனு தாக்கல் செய்ததின் பயனாக 28—4—1988 அன்று சமரசப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பின்னர் கோவை தொழிலாளர் துணை ஆணையர் இப்பிரச்சனை குறித்து 23—5—1988, 7—6—1988, 27—6—1988, 11—8—1988, 31—8—1988 மற்றும் 12—9—1988 ஆகிய தேதிகளில் பேச்சுவார்த்தை மேற்கொண்டார். நிர்வாகம் 27—6—1988-ல் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் மட்டுமே கலந்து கொண்டது. பேச்சுவார்த்தையின் போது நிர்வாகத்தின் நிதி நிலைமைப் பற்றியும், நிதியுதவி கிடைத்தால் நிறுவனத்தை இயக்க முடியுமா என்பது பற்றியும் அறிக்கை தாக்கல் செய்யு மாறு நிர்வாகத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால்

1989 மே 4]

நிர்வாகம் அவ்வாறு அறிக்கை ஏதும் தாக்கல் செய்யவில்லை. அதன் பின்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் கலந்து கொள்ளவில்லை. தொழிற் சங்கத்திடம் சங்க ஆவணங்களைத் தாக்கல் செய்ய பல முறை அறிவித்தும் அவற்றை தாக்கல் செய்யவில்லை.

(3) எனவே, இந்நிறுவனத்தைத் திறப்பதற்கு அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு, நிர்வாகமும், தொழிற் சங்கமும் ஒத்துழைக்காததால் மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் நடத்த இயலவில்லை.

(4) இந்நிறுவனம் நலிவுற்று மூடப்பட்டுள்ளதால் பாதிக்கப் பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணமாக தலா ரூ. 250 தொழிலாளர் நல நிதியிலிருந்து வழங்க தொழிலாளர் நல வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(5) மேலும், இந்நிறுவனத்திலுள்ள 52 தொழிலாளர் களில் 40 பேர்கள் அவர்களது கணக்கை நிர்வாகத்துடன் நேரடியாகப் பேசி தீர்த்துக் கொண்டு சென்றுவிட்டதாகவும் தெரிகின்றது.

(முற்பகல் 9.50)

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றபடி அங்கே இருக்கக் கூடிய தொழிலாளர்களின் கணக்கை முடித்திருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. ஆனால் உயிர் காக்கும் மருந்துகளைத் தயாரிக்கும் அந்தத் தொழிற்சாலை ஊழியர் கள் சி.ஐ.டி.யு. சங்கத்தில் சேர்ந்த ஒரே காரணத்திற்காக மூடி யிருக்கிறார்கள். ஆகவே, மீதம் இருக்கக்கூடிய தொழிலாளர் களுக்காவது அந்த நிறுவனத்தைத் திறந்து வேலை வாய்ப்பை ஏற்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு பொன். முத்துராமலிங்கம் : தலைவரவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற கருத்தின் அடிப்படையில் வழக்குகள் இன்னும் நிலுவையில் தான் இருக்கின்றன. உறுப்பினர் அவர்களுடைய கருத்தின் அடிப்படையில் அந்த வழக்குகள் பரிசீலிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. பூ. கே. வெள்ளிங்கிரி : தலைவரவர்களே, இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கின்றபடி அந்தத் தொழிற் சாலை நிதி நெருக்கடி என்ற காரணத்தால் மூடப்பட்டிருக் கிறது. ஆகவே, நிதி நெருக்கடியைப் போக்கி, அந்தத் தொழிற் சாலையைத் திறக்க உத்தரவாதம் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: தலைவர் அவர்களே, நிதி நெருக்கடி போக்கப்பட அந்த நிறுவனம் முன் வரவேண்டும். முறைப்படி கேட்கப்பட வேண்டும். அத்தகைய சூழ்நிலைகள் உருவானால்தான் அரசு பரிசீலனை செய்து, நிதிப் பற்றாக்குறையைப் போக்க ஏற்பாடு செய்ய முடியும்.

பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள்.

199—(* வினா எண். 992)திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களுக்குத் தர வேண்டிய பாஸ் புக் பீடி முதலாளிகளால் மறுக்கப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : (அ) மற்றும் (ஆ) தலைவரவர்களே, பீடி சுற்றுகின்ற தொழிலாளர்களுக்கு கலால் பிரிவைச் சேர்ந்தவர்களால் பாஸ் புத்தகம் வழங்கப் படுகிறது. அந்தக் கலால் பிரிவு மத்திய அரசைச் சேர்ந்தது. பாஸ் புத்தகம் எதற்காக வழங்கப்படுகிறது என்றால் புகை யிலை எடுத்துச் செல்லுகிறபோது உரியவர்கள்தான் எடுத்துச் செல்லுகிறார்களா அல்லது வேறு நபர் யாராவது அந்தப் புகை யிலையை எடுத்துச் செல்லுகிறார்களா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக மத்திய அரசைச் சேர்ந்த கலால் பிரிவினால் பாஸ் புத்தகம் வழங்கப்படுகிறது. ஆகவே, அதில் மாநில அரசு எதையும் செய்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 மே 4]

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் நெல்லை, திருச்சி வடாற்காடு மாவட்டங்களில் சுமார் 3 இலட்சம் பெண்கள் பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் சட்டத்தின்படி யார் வேலை செய்கிறாரோ அவர் பெயரில்தான் பாஸ் புக் அல்லது அடையாள அட்டை கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்க முடியாத சூழ்நிலையில் அதிலே அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, கலால் பிரிவு அல்ல. மேலும், பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் பெண்களாக இருப்பதால், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற பெண்கள் பெயரில் பாஸ் புக் கொடுக்காமல் அவர்களுடைய தகப்பன் பெயரில், கணவன் பெயரில் கொடுப்பதாகச் சொல்லப் படுகிறது. அப்படி இல்லாமல் வேலையில் ஈடுபட்டிருக்கிற பெண்கள் பெயரிலேயே பாஸ் புக் கொடுக்க ஏற்பாடு செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாஸ் புத்தகம் என்பது மத்திய அரசின் கலால் பிரிவினரால் தரப்படுவது. 'லாக் புக்' என்பது மாநில அரசால் வழங்கப்படுவது. இரண்டிலும் கிட்டத்தட்ட ஒரே விவரங்கள்தான் இருக்கின்றன. அந்த வகையில் லாக் புக் யார் யாருக்கு வழங்கப்படவில்லையோ அவர்களுக்கு வழங்கப்பட அரசு வலியுறுத்தி, தொடர்புடைய அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கிறது. அதில் முறைகேடுகள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருமதி பாப்பா உமாநாத்: தலைவரவர்களே, பொதுவாக முதலாளிகள், இவர்கள் வீட்டுக்குள் வேலை செய்வதால் தான் பாஸ் புக் கொடுக்க முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். 1982-ல் சுப்ரீம் கோர்ட் இது சம்பந்தமாக தீர்ப்பு ஒன்றை வழங்கியிருக்கிறது. இந்தப் பெண் தொழிலாளர்களுக்கு வாராந்தர ஓய்வு, பிரசவ கால ஓய்வு, ஆகியவை கொடுக்கப்படுவதில்லை; பிராவிடன்ட் ஃபண்டு பிடிக்கப் படுவதில்லை. ஆகையால் அவர்கள் ஒரு பாதுகாப்பற்ற

நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் இதுபற்றி தீர விசாரித்து ஒரு நல்ல முடிவை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நிறுவனங்களிலே சென்று வேலை செய்பவர்கள், பீடி சுற்றுபவர்கள் என்று ஒரு பகுதியினர். இன்னொரு பகுதியினர் புகையிலையைத் தங்கள் இல்லங்களுக்கு எடுத்துச் சென்று பீடி சுற்றுபவர்கள் ஒரு பகுதியினர். இல்லங்களிலே புகையிலையை எடுத்துச் சென்று பீடி சுற்றுகின்ற தொழிலாளர்களில் ஆண்கள், இருக்கிறார்கள்; பெண்கள் இருக்கிறார்கள்; சிறுவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பல்வேறு படிவங்கள்—விடுப்புப் படிவங்கள், ஊதியத்தைக் குறிக்கின்ற படிவங்கள்—எல்லாம் வைத்துக்கொள்ள தேவையில்லை என்று முன்னால் விதிவிலக்கு வழங்கப்பட்டது. அதற்குப் பின்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் ஆங்காங்கே தெரிவிக்கப் பட்ட கருத்துக்களை மையமாக வைத்து, விதிவிலக்கு வழங்கக்கூடாது; விதிவிலக்கு வழங்கியிருந்தாலும் அது ரத்து செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் சம்பந்தப் பட்டவர்களுக்கு அரசின் சார்பில் அறிக்கை கொடுக்கப் பட்டிருக்கிறது. விதிவிலக்குகள் ரத்து செய்யப்படாமல் இருக்குமானால் அப்படிப்பட்ட நிலைமைகள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தின் அடிப்படையில் மாற்றி யமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரூராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுதல்.

200—(* வினா எண். 3413) **திரு. வ. முல்லைவேந்தன்** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?